

# பனிமயம்

சனவரி 2026

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-

இறைவனின் தாய் நம் தாய்



# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



அன்பு மக்களே, நலந்தானா?

அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துகளையும், ஆசிகளையும் அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆண்டவர் நமக்குத் தந்திருக்கின்ற 2026 என்கிற புதிய ஆண்டிற்காய் நன்றி செலுத்துவோம். கடந்த ஆண்டில் நிறைவேறாத நம் விருப்பங்களும், எதிர்பார்ப்புகளும் இந்த ஆண்டில் நிறைவேறும் என்கிற நம்பிக்கையோடு இந்த ஆண்டிற்குள் அடியெடுத்து வைத்திருக்கிறோம். தாய் திருச்சபையானது ஆண்டின் முதல் நாளையே அன்னை மரியாவுக்கு அர்ப்பணிக்கிறது. நாமும் இந்த ஆண்டு முழுவதையும், இந்த ஆண்டில் நாம் திட்டமிட்டிருக்கின்ற நம் செயல்பாடுகள் அனைத்தையும் அன்னை மரியாவின் வழியாக ஆண்டவரிடம் ஒப்படைப்போம். கடவுளின் தாயும் நம் தாயுமான அன்னை மரியா நமக்காக பரிந்துரைத்து நம்மை பாதுகாப்பாராக.

ஜனவரி மாதத்தில் “தை” மாதத்தையும் தொடங்குகின்றோம். தை பிறந்தால் வழி பிறக்கும் என்பதுபோல ஆசீர்வாதமான பல வழிகளை கடவுள் நமக்குத் திறந்து பொங்கும் பொங்கலைப் போல மகிழ்ச்சி பொங்கச் செய்வாராக.

உழவுத் தொழிலையும், உழவுக்கு உதவும் மனிதரையும் விலங்குகளையும் நன்றியோடு நினைவு கூறுகின்ற மாதம் இது. கடவுள் நமக்கு கொடையாகத் தந்திருக்கின்ற இயற்கையைப் பேணி பாதுகாக்கவும் அதனை வளப்படுத்தி நமது அடுத்த தலைமுறையினருக்குக் கொடுக்கவும் நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆனால் மனிதர்கள் இயற்கையின் மீது நடத்துகின்ற தாக்குதல்கள், தவறான பயன்பாடுகள் நாம் எப்படி இந்த இயற்கையை பாதுகாத்து அடுத்த தலைமுறையினருக்கு பாதுகாப்பாய் வழங்க முடியும் என்கிற கேள்வியை எழுப்புகிறது. உணர்ந்து செயல்படுவோம். விவசாயத்தை நேசிப்போம், விவசாயிகளுக்கு உதவுவோம், இயற்கை ஆர்வலர்களை ஆதரிப்போம். அதன் வழியில் பசுமைப் புரட்சியை ஏற்படுத்துவோம். நம் வாழ்வில் மகிழ்ச்சியும், ஆசிர்வாதமும் பொங்கட்டும்.

God Bless You All.



என்றும் பாசத்துடன்

**அருள்பணி. ஸ்டார்வின்**

திருத்தல அதிபர் & பங்குத் தந்தை



உதயம் 27 தாரகை 5

நிர்வாகி & வெளியிடுபவர்
அருள்பணி. ஸ்டார்வின்
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருள்பணி. ஸ்டார்வின்

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

**இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து**

இறைவார்த்தையுடன் செபிப்பது நம் வாழ்விற்கு உணவாகவும், நமது சமூகங்களில் நம்பிக்கையின் ஊற்றாகவும் அமையவும், மேலும் சகோதரத்துவமும் மிஷனரி மனப்பான்மையும் கொண்ட திருச்சபையை உருவாக்க உதவவும் நாம் செபிப்போம்.

# உள்ளே...

1. மரியன்னையின் திருப்பெயர்கள் . . . . . . . . . . . . 4
அருள்பணி. குமார்ராஜா

2. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் . . . . . . . . 6
கலாபன் வாஸ்

3. தரிசனம் தருவாய் தாயே... . . . . . . . . . . . . . . . . 8
அருள்பணி. க.செ. பிரவீன் ராசு

4. அன்னை மரியா இறைவனின் தாய் . . . . . . . . 10
ஜோ. ரெஜினா கிரகோரி

5. திருக்காட்சி - மனிதாபத்தின் வெளிப்பாடு . . . . . 12
ரோஸ் சேவியர்

6. இம்மாதப் புனிதர் . . . . . . . . . . . . . . . . . . . . . 14
அருள்சகோ. மிக்கேல் அருள்ராஜ்

7. சிங்கை சீலா . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 15
ம. வெனான்சியஸ்

8. விவிலியப் போட்டி . . . . . . . . . . . . . . . . . . . . 16

9. பனிமயப் பகிர்வு . . . . . . . . . . . . . . . . . . . . . . 19

10. பனிமய சாட்சியம் . . . . . . . . . . . . . . . . . . . . 22

# மரியன்னையின் திருப்பெயர்கள்

## 39 மறைசாட்சியரின் அரசி!



மரியன்னையின் மன்றாட்டு மாலையில் நாம் காணும் ஒரு வித்தியாசமான பெயர் "மறைசாட்சியரின் அரசி" (Queen of the Martyrs). கிறிஸ்துவுக்காக இரத்தம் சிந்தியவரே மறைசாட்சியர் எனப்படும்பொழுது, இரத்தமே சிந்தாத மரியா எப்படி மறைசாட்சியரின் அரசியாக இருக்க முடியும் என்ற கேள்வி எழலாம்.

புனித ஜான் ஹென்றி நியூமன் இக்கேள்விக்கு அருமையான விடை ஒன்றைத் தருகிறார். உடலின் வேதனையைவிட ஆன்மாவின் வேதனை மிகவும் கொடியது. இதற்கு எடுத்துக்காட்டாக நரகத்தில் வதையுறும் ஆன்மாக்களையும், உத்தரிக்கும் நிலையில் வேதனையுறும் ஆன்மாக்களையும் முன் வைக்கிறார் அவர். ஏன், உடலில் துன்பம் இல்லாவிட்டாலும், அன்புக்குரிய ஒருவரின் இறப்பினால் அளவற்ற மனவேதனையை நாள்தோறும் அனுபவிக்கும் மனிதரும் நம்மிடையே இருக்கின்றனரே? அதுபோலவே, தம் ஒரே அன்பு மகனின் வேதனைகளையும், சிலுவைப்பாடுகளையும் கண்முன்னே பார்த்த மரியன்னையின் துன்பமும் ஒரு மறைசாட்சியத்துக்கு ஒப்பானதே என்கிறார் நியூமன்.

துன்பம் மட்டுமே மறைசாட்சியத்தின் அளவுகோல் அல்ல. இயேசுவுக்காக உயிரைக் கொடுக்கும் அளவுக்கு அவர்மீது கொள்ளும் அன்பும் ஓர் அளவுகோலே. "தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை" (யோவா 16:13) என்று இயேசுவே மொழிந்தார் "எனவே, உயிரைக் கொடுக்கும் அளவுக்கு மறைசாட்சியர் இயேசுவின்மேல் அன்பு கொண்டிருந்தனர். மரியா இயேசுவின் மேல் கொண்டிருந்த தாயன்பு மறைசாட்சியரின் அன்பைவிட மேலானது அல்லவா? எனவே, அந்த அன்பை முன்னிட்டும் அவர் மறைசாட்சியரின் அரசி என அழைக்கப்படுவது தகுதியானதே.

அரசி என்னும் பெயர் மாட்சிக்கும், பெருமைக்கும் உரியது என்றால், மறைசாட்சியம் என்பது துயரத்துக்கும், வேதனைக்கும் உரியது. "மகள் சீயோனே! கன்னிப் பெண்ணே! யாருக்கு உன்னை இணையாக்கித் தேற்றுவேன் உன்னை? உன் காயம் கடலைப்போல் விரிந்துள்ளதே" (புல 2:13) என்று எருசலேமின் துயரத்தைக் கண்டு புலம்பிய இறைவாக்கினரைப் போலவே, மரியாவின் துயரத்தைக் கண்டனர் திருமறைத் தந்தையர்.

"உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்" (லூக் 2: 35) என்ற சிமியோனின் இறைவாக்கு மரியாவின் வாழ்வில் நிறைவேறியது அவரை ஒரு மறைசாட்சியாக மாற்றியது என்கிறார் புனித பெர்னார்ட். மறைசாட்சியர் தங்கள் இன்னுயிரைக் கையளித்தனர், மரியாவோ தம் ஒரே மகனின் உயிரைச் சிலுவையில் கையளித்தார். அதன் வழியாக மறைசாட்சியரைவிட மேலான வேதனையை அனுபவித்தார் என்றார் புனித அல்போன்ஸ் லிகோரியார். மறைசாட்சியர் அனைவரின் வேதனைகளை ஒன்றாகச் சேர்த்தால், மரியாவின் வேதனை அவற்றைவிடப் பெரியது என்றார் புனித ஆன்செல்ம். ★



# 40 இறையடியார்களின் அரசி!

மரியாவின் மன்றாட்டு மாலையில் அரசி என்னும் பெயருடன் 13 மன்றாட்டுகள் உள்ளன. அவற்றுள் “இறையடியார்களின் அரசி” (Queen of Confessors) என்பதுவும் ஒன்று.



கிறிஸ்துவுக்காக உயிரைக் கையளித்து, இரத்தம் சிந்தி சான்று பகர்ந்தவர்கள் மறைசாட்சியர் என்று அழைக்கப் படுகின்றனர். ஆனால், உயிரைக் கையளிக்காமல், இரத்தம் சிந்தாமல், துன்பம் அனுபவித்துக் கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழ்ந்தவர்களே இறையடியார்கள் எனப்படுகின்றனர். இவர்கள் சிறைத் தண்டனை, நாடு கடத்தப்படுதல், துன்புறுத்தப்படுதல், உடல் உறுப்புகள் சிதைக்கப்படுதல் போன்ற துன்பங்களை அனுபவித்தனர். எனவே, மறைசாட்சியருக்கு இணையானவர்கள். இவர்களையும் திருஅவை போற்றி பெருமைப் படுத்தியுள்ளது.

பிற்காலத்தில் வனாந்திரத் துறவியர், திருத்தந்தையர், மடாதிபதிகள் ஆகியோரும் இறையடியார் என அழைக்கப்பட்டனர். புனித ஜெரோம், அரசரான புனித எட்வர்ட், புனித பேசில் ஆகிய தொடக்ககாலப் புனிதர்களோடு, புனித அல்போன்ஸ் லிகோரியார், பிரான்சிஸ் சலேசியார், ஜான் மரிய வியான்னி போன்ற அண்மைக் காலப் புனிதர்களும் இறையடியார்கள் பட்டியலில் உள்ளனர்.

மறைசாட்சியரின் அரசியான மரியா இறையடியார்களுக்கும் அரசி என அழைக்கப்படுவது முற்றிலும் பொருத்தமானதே. முதலில், மரியாவே ஒரு மிகச் சிறந்த இறையடியார். அவர் இரத்தம் சிந்தவில்லை, தம் உயிரைக் கையளிக்கவில்லை. ஆனால், இயேசுவுக்காகத் துன்புற்றார். தம் வாழ்வைக் கையளித்தார். எனவே, இறையடியார்கள் அனைவரிலும் அவரே முதன்மையானவர், அவரே அரசி.

இரண்டாவதாக, அனைத்து இறையடியார்களுக்கும் அவரே மிகச் சிறந்த மாதிரியாக உள்ளார். அவரது அடைக்கலத்திலும், பாதுகாவலிலும் அனைத்து இறையடியார்களும் வாழ்ந்தனர். இதுவும் அவர் அவர்களது அரசி என அழைக்கப்படுவதற்கான காரணமே.

இறையடியார் என்னும் சொல்லின் ஆங்கில மூலம் “சான்று பகர்வோர்” (Confessor) என்பது நம் கவனத்தை ஈர்க்கிறது. தங்கள் சாவினால் அல்ல, மாறாகத் தம் வாழ்வினால் தம் நம்பிக்கையைப் பறைசாற்றியவர்களே இப்புனிதர்கள். மரியாவோ “நான் ஆண்டவரின் அடிமை; உம்சொற்படியே எனக்கு நிகழட்டும்” (லூக் 1:38) என்ற ஒரே சொல்லினால் தமது நம்பிக்கையைப் பறைசாற்றிவிட்டார். அவ்வாறே தம் வாழ்வு முழுவதும் வாழ்ந்து காட்டினார். எனவே, இறையடியார்களின் அரசி என்னும் பெயருக்கு முற்றிலும் தகுதி பெற்றவராகிறார் என்கிறார் புனித ஜான் ஹென்றி நியூமன்.



அருள்பணி. குமார்ராஜா

# இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்

## மனு உருவான இறைமகன்



★ **"வானவர் தூது சொன்னதும் கன்னி** மரியா தன் உடலிலும் உள்ளத்திலும் கடவுளின் வார்த்தையை ஏற்றார். வாழ்வை உலகிற்கு அளித்தார். எனவே, அவர் உண்மையாகவே கடவுளும் மீட்பருமானவரின் தாய் என ஏற்றுக்கொள்ளப் பெற்றுப் போற்றப் பெறுகிறார். இறைமகனின் தாய் என்ற இந்த உன்னத நிலையாலும் பெருமையாலும் அணி செய்யப் பெறுகின்றார் – திருச்சபை – எண் : 53.

★ "தூய இரனேயு கூறுவதுபோல, 'மரியா தன் கீழ்ப்படிதலால் தானும் மனித இனம் அனைத்தும் நிறைவாழ்வு பெறக் காரணமானார்.' எனவே, இவரோடு வேறுபல திருமறைத் தந்தையரும் தம் மறையுரைகளிலே பின்வருமாறு கூறுகின்றனர் – "ஏவாளின் கீழ்ப்படியாமையால் விளைந்த முடிச்சு, மரியாவின் கீழ்ப்படிதலால் அவிழ்க்கப்பட்டது. நம்பிக்கையின்மையால் கன்னி ஏவாள் கட்டியதை, நம்பிக்கையால் கன்னி மரியா அவிழ்த்துவிட்டார்." ஏவாளோடு ஒப்பிட்டு, மரியாவை 'வாழ்வோரின் தாய்' எனவும் அவர்கள் அழைக்கின்றனர். '**ஏவாளால் சாவு, மரியாவால் வாழ்வு**' எனத் திரும்பத் திரும்ப எடுத்துரைக்கின்றனர்" – திருச்சபை எண் : 56.

★ நன்னயமும், ஞானமும் உள்ள கடவுள் தம்மைத் தாமே வெளிப்படுத்தவும், தமது திருவுளத் திட்டத்தை அறிவிக்கவும் விரும்பினார் (காண்: எபே 1:9). இத்திட்டத்தால், மனிதரான இறைவார்த்தையாம் கிறிஸ்துவின் மூலம், தூய ஆவியின் வழியாக மனிதர்கள் இறைத்தந்தையை அணுகுகின்றனர். இறையியல்பில் பங்கு கொள்கின்றனர் (காண் : எபே 2:18, 2பேதுரு 1:4). – இறை வெளிப்பாடு – எண்.2.

★ "பற்பல முறையிலும் பல்வேறு வகையிலும் இறைவாக்கினர் வாயிலாகப்

பேசிய கடவுள், இவ்விறுதி நாள்களில் தம் மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார் (எபி 1:1-2). என்றும் வாழும் இறைவாக்காகிய அவருடைய மகன் எல்லா மனிதருக்கும் ஒளியாய் இருக்கிறார். அவர் மக்களிடையே வாழ்ந்து, தம் உள்ளார்ந்த உண்மைகளை அவர்களுக்கு எடுத்துரைக்கும்படி (காண்: யோவா 1:1-18). கடவுள் அவரை அனுப்பி வைத்தார்" - இறை வெளிப்பாடு - எண். 4.

★ "தந்தையால் அனுப்பப் பெற்று மகன் வந்தார். உலகம் உருவாகுமுன்னரே அவரில் தம்மைத் தேர்ந்தெடுத்து தமக்குச் சொந்தமான பிள்ளைகளாக்கிக் கொள்ள தந்தை முன்குறித்து வைத்தார். ஏனெனில், அவர் அனைத்தையுமே கிறிஸ்துவின் தலைமையில் ஒன்றுசேர்க்க விழைந்தார் (காண்: எபே 1:4-5,10)." - திருச்சபை, எண் : 3.

★ "ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கவும், உள்ளம் நொறுங்கியோரைக் குணப்படுத்தவும்" (லூக் 4:18), "இழந்து போனதைத் தேடி மீட்கவுமே (லூக் 19:10) தந்தையால் கிறிஸ்து அனுப்பப் பெற்றார்." - திருச்சபை, எண் - 8.

★ "அளவில்லாக் கருணையும் ஞானமும் உள்ள கடவுள் உலகை மீட்க ஆவல் கொண்டு, 'காலம் நிறைவேறியபோது..... நம்மை மீட்டுத் தம் பிள்ளைகள் ஆக்குமாறு தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராக..... அனுப்பினார்" (கலா 4:4-5). 'இந்த மகன் மானிடரான நமக்காகவும் நம் மீட்புக்காகவும் வானமிருந்து இறங்கினார். தூய ஆவியினால் கன்னி மரியாவிடம் உடல் எடுத்தார்! மீட்பின் இந்த மறைபொருள் நமக்கு வெளிப்படுத்தப்பட்டுத் திருச்சபையில் தொடர்ந்து நீடிக்கிறது." - திருச்சபை - எண்:52.

★ "கிறிஸ்து இயேசு கடவுளுக்கும் மனிதருக்கும் நடுவே உண்மை இணைப்பாளராக உலகிற்கு அனுப்பப்பட்டார். கிறிஸ்து கடவுள் என்பதால், 'இறைத் தன்மையின் முழு நிறைவும் உடலுருவில் கிறிஸ்துவுக்குள் குடிகொண்டிருக்கிறது" (கொலோ 2:9). கிறிஸ்து மனித இயல்பைக் கொண்டவர் என்பதால், "அருளும் உண்மையும் நிறைந்து விளங்கிய" (யோவா 1:14) புதிய ஆதாமாக இருக்கின்றார். அதனால், புதுப்பிக்கப்பெற்ற மனித குலத்தின் தலையாக ஏற்படுத்தப்பட்டுள்ளார். இவ்வாறு, மனிதர்களை இறை இயல்பில் பங்குபெறச் செய்வதற்காக இறைமகன் உண்மையிலேயே மனிதரானார்" - திருச்சபையின் நற்செய்திப் பணி- எண். 3

தொகுத்தளிப்பவர் :

**கலாபன் வாஸ்**



# தரிசனம் தருவாய் தாயே...

## மரியன்னை காட்சிகள் பற்றிய தொடர் 5



### 3. குவாதலூப்பே மாதா காட்சி (1531)

ஒரு மலையுச்சியில் அவ்வளவாகப் பரிச்சயமில்லாத, படிப்பறிவற்ற, பழங்குடியினத்தைச் சார்ந்த ஒரு மனிதருக்கு அன்னை தந்த காட்சி பல்லாயிரக்கணக்கான மக்கள் கிறிஸ்தவர்களாக மாறக் காரணமாக இருந்தது என்றால் உங்களால் நம்ப முடிகின்றதா? இந்தப் பெருவியப்புக்குக் காரணமாக விளங்குவதுதான் குவாதலூப்பே மாதா காட்சி. திருஅவையின் தலைமைப் பீடத்தால் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட முதல் மரியன்னையின் காட்சி இது தான் என்பது இக்காட்சிக்குக் கூடுதல் சிறப்பு. இக்காட்சி நிகழ்ந்த இடத்தில் கட்டப்பட்ட குவாதலூப்பே அன்னை திருத்தலம்தான் இன்று கிறிஸ்தவத் திருத்தலங்களில், உலகிலேயே அதிகமாகத் திருப்பயணிகள் வந்து சந்திக்கும் மூன்றாவது திருத்தலமாகவும், முதல் மரியன்னைத் திருத்தலமாகவும் விளங்குகின்றது.

1521இல் நடைபெற்ற ஹெர்னன் கோர்த்தஸ் (Hernán Cortés) தலைமையிலான அஸ்டெக் பேரரசின் (Aztec Empire) படையெடுப்பிற்குப் பிறகு, ஸ்பெயின் நாட்டின் தலைநகர் மீட்டுருவாக்கம் செய்யப்பட்டது. இன்றிருக்கும் மெக்சிகோ நகரின் முதல் வடிவம் அதுவே. இந்தப் படையெடுப்பிற்குப் பின், ஸ்பெயின் நாட்டின் பூர்வகுடிகள் பல்வேறு அடக்குமுறைகளுக்கு ஆளானார்கள். இந்த அடக்குமுறைகளை எதிர்த்து, அங்கு மறைப்பணியாற்றிவந்த ஆயர் யுவான் சுமராகா (Bishop Juan de Zumárraga) உள்ளிட்ட பல மறைப்பணியாளர்கள் குரல் கொடுத்து வந்தனர். கிறிஸ்தவ மறைப்பணியாளர்களைப் பலரும் சந்தேகக் கண்ணோடு பார்த்தாலும் ,வெகுசிலர் மறைப்பணியாளர்கள் தங்களுக்கு ஆதரவாக இருந்ததை உணர்ந்து, கிறிஸ்தவ மறையைத் தழுவினர். அவர்களுள் ஒருவர்தான் பழங்குடியினரான குவாஹ்த்லடோட்சின் (Cuauhtlatoatzin) என்பவர். யுவான் டியேகோ என்ற பெயரோடு இவரும், மரிய லூசியா என்ற பெயரோடு இவர்தம் மனைவியும் திருமுழுக்குப் பெற்றுக் கிறிஸ்தவர்களாயினர். குவாஹ்டிட்லன் (Cuauhtitlan) என்ற கிராமத்தில் தன் மனைவியோடு வாழ்ந்து வந்தார் யுவான் டியேகோ.

குவாஹ்டிட்லன் கிராமத்திலிருந்து 20 கி.மீ. தொலைவிலுள்ள டெல்கோ - டெனோசிட்லனில் என்ற நகரில் பிரான்சிஸ்கன் சபைத் துறவியர் துறவுமடம் ஒன்றைக் கட்டியிருந்தனர். அந்தத் துறவுமடத்திலுள்ள கோயிலுக்கு யுவான் டியேகோ, மரிய லூசியா இருவருமே சென்று ஒவ்வொரு நாளும் திருப்பலியில் பங்கேற்பது



வழக்கம். 1529ஆம் ஆண்டு மரிய லூசியா உடல்நலக் குறைவினால் இறந்துபோனார். மனைவியின் இறப்பைத் தொடர்ந்து, அருகிலிருந்த டெப்லட்லக் (Tepletlac) என்ற மற்றொரு கிராமத்தில் தன் மாமா யுவான் பெர்னார்டினோ என்பவரோடு யுவான் டியேகோ வசித்து வந்தார். இங்குதான் யுவான் டியேகோவிற்கு நான்கு முறையும், யுவான் பெர்னார்டினோவிற்கு ஒரு முறையும் என, மொத்தம் ஐந்து முறை குவாதலூப்பே மாதா காட்சி கொடுத்தார்.

இனி காட்சிக்கு வருவோம். டெப்லட்லக் கிராமத்திலிருந்தும், யுவான் டியேகோ ஒவ்வொரு நாளும் தவறாமல் திருப்பலியில் பங்கேற்பது, மறைக்கல்வி கற்றுக் கொள்வது என உண்மையானக் கிறிஸ்தவ வாழ்வை வாழ்ந்து வந்தார். அப்படித்தான் அன்றும் தன் வழக்கப்படி, திருப்பலியிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மறைக்கல்வி வகுப்பிலும் பங்கேற்பதற்காகத் தன் கிராமத்திலிருந்து பிரான்சிஸ்கன் சபைத் துறவியர் பொறுப்பிலிருந்த சிற்றாலயத்திற்கு நடந்து சென்று கொண்டிருந்தார். அன்று 1531ஆம் ஆண்டு டிசம்பர் 09ஆம் நாள் சனிக்கிழமை ஸ்பெயின் நாட்டு வழக்கப்படி அன்னை மரியாவின் அமலஉற்பவத் திருவிழா. திருவிழாத் திருப்பலிக்குச் செல்லும் வழியில், தெப்பியக் (Tepeyac Hill) என்ற மலைப்பகுதியைக் கடந்தபோதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது.

திருப்பலிக்காகச் சென்று கொண்டிருந்த யுவான் டியேகோ, தெப்பியக் மலையடிவாரத்தின் அருகில் நடந்து சென்று கொண்டிருந்தபோது மலையிலிருந்து ஒரு வித்தியாசமான இன்னிசை ஒன்றைக் கேட்டார். அந்த இசை அவரை அப்படியே மெய்மறந்து நிற்கச் செய்தது. திடீரென்று அந்த இசையின் நடுவில் “யுவானிட்டோ” எனத் தன் பெயரைத் தன் சொந்த மொழியான நவாரா மொழியில் யாரோ அழைப்பதையும் அவர் கேட்டார். தன்னை அழைப்பது யார் என்பதை அறிந்துகொள்ளும் ஆர்வத்துடன் மலையை நோக்கி நடந்தார் யுவான் டியேகோ. கொஞ்ச தூரம் நடந்ததும், ஒரு ஒளிவெள்ளம் அவரைச் சூழ்ந்தது. கண்ணைப் பறிக்கும் ஒளிவெள்ளத்தின் நடுவில் ஒரு அழகான பெண் நிற்பதை அவர் பார்த்தார். சூரியனை ஆடையாக அணிந்த பெண்ணாக அவர் காட்சியளித்தார். அச்சமும், வியப்பும் ஒருசேர அங்கேயே முழந்தாள்படியிட்டார்.

அந்தப் பெண் தொடர்ந்து பழங்குடிகளின் மொழியில் பேசினார்: “மகனே, யுவானிட்டோ, நான்தான் கடவுளின் தாயாகிய கன்னி மரியா. விண்ணக அரசியாக ஒவ்வொரு நாளும் நீ புகழ்ந்து போற்றுவது என்னைத் தான். இரக்கத்தின் அன்னையாகிய எனது மாட்சி விளங்குமாறு எனக்கு இந்த இடத்தில் ஒரு கோயிலைக் கட்டவேண்டும். நீ உடனடியாக ஆயர் சுமராகாவிடம் சென்று நான் சொன்ன இச்செய்தியைச் சொல்.” அன்னை தொடர்ந்து பேசிக்கொண்டேபோக, பாதி புரிந்தும் மீதி புரியாமலும் திகைத்து நின்றார், யுவான் டியேகோ.

அதன் பிறகு என்ன நடந்தது? அன்னை சொன்னதற்கு யுவான் என்ன பதில் சொன்னார்? அன்னை சொன்னபடி ஆயரைச் சென்று சந்தித்தாரா? சந்திக்க முடிந்ததா? அவர் எதிர்கொண்ட சவால்கள் என்னென்ன? இறுதியாக அந்த இடத்தில் கோயில் கட்டப்பட்டதா? இல்லையா?

கேள்விகளோடு காத்திருங்கள், அடுத்த இதழ் வரை......

தொடரும்...



அருள்பணி.
க.செ. பிரவீன் ராசு



# அன்னை மரியா இறைவனின் தாய்



நம்பிக்கையுடன் நாம் எதிர்நோக்கிக் காத்திருந்த மெசியா, நம் மீட்பராகிய கிறிஸ்து பிறந்துவிட்டார். கிறிஸ்து பிறப்பின் விழாக் கொண்டாட்டத்தில் மகிழ்வுடன் குதூகலித்துக் கொண்டிருக்கும் வேளையில், திவ்விய பாலகன் பிறந்த எட்டாம் நாள் அவருக்கு 'இயேசு' என்னும் பெயரிடப்பட்ட பாக்கியமான நாளாம் புத்தாண்டு பிறந்து, நம் மகிழ்வில் இனிமை சேர்த்துக் கொண்டிருக்கிறது.

கண்ணைக் கவரும் வண்ண விளக்குகள் இல்லங்களில் ஒளிவீச, புத்தம்புது ஆடைகளை அணிந்து, புத்தாண்டில் பல நன்மைகளை எதிர்பார்த்து, புத்தாண்டின் தொடக்க நாளை நம் அன்பு உறவுகளுடன் கொண்டாடும் நாளில், ஜனவரி முதல் நாளில் இன்று நாம் சிறப்பாகக் கொண்டாடும் விழா அன்னை மரியா இறைவனின் தாய் என்பது உலகறிந்த உண்மை.

தொடக்கத்தில் இறைவன், ஏவாள் செய் பாவத்தினின்று நம்மை மீட்க, அவரது ஒரே மகனை இப்பூவுலகிற்கு அனுப்ப அன்னை மரியாவைத் தேர்ந்தெடுத்தார். உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்துக்கும், அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவோம். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும் (தொநூ 3:15) என பாம்பாகிய அலகைக்கு சவால் விட்டார். அந்தப் பெண் அன்னை மரியா, 'ஆகட்டும்' என்றே இறைச் சித்தத்தை ஏற்று மீட்பின் வரலாற்றுக் கதவைத் திறந்து வைத்தாள்.

இறைவன் இப்பூவுலகை நமக்காகப் படைத்தார். நம்மை இறைச்சாயலில் படைத்தார். நாமோ, பாவத்தின் விளைவாக இறைவனின் அன்பை சுவைக்கத் தவறிவிட்டோம். ஏவாள் செய் பாவம், சென்மப் பாவமாக நம்மில் பதிந்துவிட்டது.

அளவற்ற வரங்களைத் தரும் இறைவன், நிபந்தனையற்ற அன்பை செலுத்தும் நம் இறைத்தந்தை, நம்மைப் பாவத்திலிருந்து மீட்க, தம் ஒரே மகன் இயேசுவை அன்னை மரியாவின் மூலம் தந்தார். மரியன்னையின்

கருவறை இறைமகன் இயேசுவின் முதல் நற்கருணைப் பேழை அல்லவா? எனவே, இறைவனைக் கருவில் சுமக்கும் அன்னையாக தூய்மையானவளாக, பிறப்பு நிலைப் பாவமில்லாத பெண்ணாக இறைவன் அன்னை மரியாவைத் தேர்ந்தெடுத்தார்.

இறைவன் மரியாவின் கருவில் மனித உரு எடுத்தார். அன்னை மரியா, இறைவனின் தாய் என அழைக்கப்படுகிறார். விவிலியத்தில் புனித லூக்கா, அன்னை மரியாவை ஆண்டவரின் தாய் (1:43) என்று எலிசபெத்தம்மாள் அழைப்பதைச் சுட்டிக் காட்டுகிறார். 3ஆம் நூற்றாண்டிலிருந்தே அன்னை மரியை வல்லமை மிகுந்த பரிந்துரையாளராகக் கருதி, "ஓ இறைவனின் அன்னையே! என்று அழைத்து மக்கள் மன்றாடுகின்றனர். புனித எப்ரேம் 'மகன்' என்று இயேசுவை அழைக்க, மரியாவைத் தவிர யாருக்குத் துணிவு வரும் என்கிறார். கி.பி. 431ஆம் ஆண்டு ஜுன் 7ஆம் தேதி எபேசு பொதுச் சங்கம் அன்னை மரியாவை இறைவனின் தாய் என்று உறுதி செய்து அதனை நம்பிக்கைக் கோட்பாடாக வெளியிட்டது.

ஒவ்வொரு ஆண்டும் புத்தாண்டு அன்று நாமும் அன்னை மரி, இறைவனின் தாய் என்பதை விழா எடுத்துக் கொண்டாடுகிறோம்.

இறைமகன் இயேசு மரியன்னை தன்னை சந்திக்க வந்தபோது, யார் என் தாய்? எனக் கேட்டு, இறைத் தந்தையின் வார்த்தைக்கேற்ப வாழ்பவர் என் தாய் என்பதை மறைமுகமாகச் சுட்டிக்காட்டி அன்னையின் மகிமையைப் பறைசாற்றுகின்றார்.

பெந்தகோஸ்து திருவிழாவில், தூய ஆவியை, நெருப்பு நாக்கு வடிவில் அனுப்பி, அன்னை மரியின் தலைமையில், சீடர்களின் கூட்டமைப்பில் திருச்சபையை உருவாக்கி, திருச்சபையின் தாயாக நியமிக்கின்றார். "இதோ உம் தாய்" என்று தமது சீடரிடம் அன்னை மரியை ஒப்படைக்கும்போது, உலக மக்களாகிய நமக்குத் தாயாகத் தருகின்றார்.

நான்காம் நூற்றாண்டிலேயே முதன் முதலில் 'திருச்சபையின் தாய்' என்று அழைக்கப்பட்ட வேளையில் திருத்தந்தை 6ஆம் பவுலால் அன்னை மரியா, திருச்சபையின் தாயாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டார்கள். அன்னை மரி திருச்சபையின் தாய் என்ற விழாவை சிறப்பிக்கும் வகையில், திருத்தந்தை பிரான்சிஸ் பெந்தகோஸ்து விழாவுக்கு அடுத்தநாள் இவ்விழாவினை அறிமுகம் செய்தார்.

நாம் மரியன்னையின் பிள்ளைகள் அல்லவா! மனித உடல் எடுத்த இறைமகன் இயேசுவின் சகோதரர்கள் அல்லவா! இயேசுவுக்குகந்த வாழ்க்கை வாழ்வோம். இயேசுவின் வழியில் செல்வோம். நம் அன்னையின் தாழ்ச்சி, தூய்மை, பிறரன்பு போன்ற பண்புகளை நாமும் அணிந்து, அன்னை மரியின் பிரியமான பிள்ளைகளாக வாழ்வோம். உரிமையுடன் நம் தேவைகளை, ஏக்கங்களை, எதிர்பார்ப்புகளை அன்னையிடம் எடுத்துச் செல்வோம். அவள் பரிந்துரையை இறைஞ்சிடுவோம். செபமாலை வழியாக, அன்னைக்கு புகழ்மாலை அணிவிப்போம். பேரிரக்கம் உள்ள தாய், நமக்காகப் பரிந்துரைத்து, நம்மை வாழ வைப்பாள்.



ஜோ. ரெஜினா கிரகோரி

# திருக்காட்சி - மனிதாபத்தின் வெளிப்பாடு



மனிதனைப் படைத்தவர் இறைவன்; மனிதனின் எண்ணங்களைப் படைத்தவர் யார்? என்று சிந்தித்தால் மனம் என்று அறிகிறோம். சிந்திக்கும் மனிதனே சிந்தனையாளன். எண்ணத்தை ஒரே நிலையில் (நற்சிந்தனை) சிந்திப்பவன் தன்னை அறிந்துகொள்ளும் ஆற்றலைப் பெற்று, மன அமைதியுடன் வெற்றியடைகிறான்.

மூன்று வகையான சிந்தனை உடையவர்களை நாம் அறியப் போகிறோம். மற்றவர்களின் முன்னேற்றத்தைக் கண்டு பொறாமைப்படுவதோடு, தனக்கு மேல் யாரும் உயரக் கூடாது என்று எண்ணும் மனிதன் வெற்றி பெற்றதாக சரித்திரம் இல்லை. ஏரோது என்ற அரசன், "யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே? அவரது விண்மீன் எழக் கண்டோம். அவரை வணங்க வந்திருக்கிறோம்" என்று ஞானிகள் வழியாகக் கேட்ட செய்தி (மத் 2:2) கலக்கத்தை உண்டாக்க, "அவர் பெத்லகேமில் (யூதேயா) பிறக்க வேண்டும்" என்பதையும் திட்டவட்டமாக விசாரித்து, அவர்கள் திரும்பும்போது, தனக்கு அறிவிக்கச் சொல்கிறான்.

ஞானிகளின் மனநிலை தூய்மையானதாக, மீட்பரின் தரிசனத்திற்கு ஏங்கும் நிலையில், ஏரோதின் தீய எண்ணத்தை அவர்கள் கண்டுகொள்ளவில்லை. கிரேக்க மொழியில், 'மாகோஸ்' என்றால் 'ஞானி' என்று பொருள். அவர்கள் அறிவிலும், ஞானத்திலும்



செல்வத்திலும் சிறந்தவர்களாக, தாழ்ச்சி நிறைந்தவர்களாக, நற்சிந்தனையாளராகத் திகழ்ந்தார்கள். ஆண்டவரின் தூதரால் எச்சரிக்கப்பட்டு, மனநிறைவோடு தங்கள் இடத்திற்கு திரும்பிச் சென்றனர்.

ஞானிகள் என்றும், சாஸ்திரிகள், அரசர்கள் என்றும் பலவாறு அழைக்கப்படும் அவர்கள், வெவ்வேறு இடத்தைச் சேர்ந்தவர்களாக, புற இனத்தாராக, வேற்றுமையில் ஒற்றுமை உடையவராக, ஒரே மனமுடையவர்களாக மீட்பரைக் காண வேண்டும் என்ற ஆவலில் கிழக்கிலிருந்து வந்ததாகக் காண்கிறோம். விண்மீன் என்பது ஒரு புதிய அரசர் தோன்றுவார் என்னும் நம்பிக்கையின் பிரதிபலிப்பு. மெல்கியோர் பாரசீக ஞானி இயேசுவை அரசராக எண்ணி, பொன்னையும், கஸ்பார், எத்தியோப்பிய ஞானி, இயேசு தன் உயிரைப் பணயமாக வைத்து மக்களைப் பாவத்திலிருந்து மீட்பார் என்ற எண்ணத்துடன், இறந்த உடலைப் பதப் படுத்த உதவும் வெள்ளைப்போளத்தையும், பல்தாசார், அராபிய ஞானி, சாம்பிராணி குருத்துவத்தைக் குறிக்கும் நோக்கத்துடன், பரிசாகக் கொண்டுவந்து, சற்றும் எதிர்பார்க்காத மாட்டுத் தொழுவத்தில் பரமனை அன்னை மரியின் மடியில் கண்டு நெடுஞ்சாண் கிடையாக, தாழ்ச்சியுடன் மண்டியிட்டு கடவுளின் அருளைப் பெற்றுச் சென்றனர்.

ஏரோது அரசனோ, கோபம் கொண்டு, பல நூற்றுக்கணக்கான குழந்தைகளைக் கொன்ற, பாவத்தைக் கட்டிக்கொண்டு அழிவைத் தேடிக் கொள்கிறான். ‘கெடுவான் கேடு நினைப்பான்’ என்பதுபோல மனம் சில சமயம் நமக்கு எதிரியாக இருக்கிறது.

குழந்தை இயேசுவை மடியில் வைத்து இருந்த அன்னை மரியா, கடவுளின் திருவுளத்திற்கு கட்டுப்பட்டு, சிறு வயதில், வயிற்றில் குழந்தையுடன், காடு, மலை என்று பயணம் செய்து, இடம் இல்லாமல் திண்டாடி, ‘இறைமகனுக்குத் தாய்’ என்ற பெருமையின்றி, அமைதியுடன் ஆண்டவரின் திருவுளத்தை சிந்தித்துக் கொண்டிருந்தார் (லூக் 2:19)

ஞானிகளின் பக்திப் பரவசம், ஏரோதின் பகைமை உணர்வுகள், அன்னை மரியாவின் தாழ்ச்சியான சிந்தனைகள் இவற்றில் ஒவ்வொன்றும் அவரவர் மனதிலிருந்தே வருகின்றன. தீய எண்ணம், செயல் இவற்றிலிருந்து வெளிவர போராட வேண்டும். சாக்ரடீஸ் என்ற தத்துவ ஞானி, ‘உன்னையே நீ அறிய வேண்டும்’. தீவினை ஆசைகளை கிள்ளி எறிய முயற்சிக்க வேண்டும். நற்பண்புகளை மனதில் வளர்த்து உண்மையை உணர்பவர்களே மனிதர்களாகக் கருதப்படுவர் என்கிறார்.

புனித அகுஸ்தினார், ‘மனிதர்கள் வழியாகக் கடவுளை அடையும் வழியைத் திருக்காட்சிப் பெருவிழா நமக்கு உணர்த்துகிறது’ என்கிறார். இயேசு தன்னை புறவினத்தார்க்கும் மீட்பராக வெளிப்படுத்தியதை நினைவுகூரும் விழா. இவ்விழாவில் நாமும் தாழ்ச்சி என்னும் குணத்தை அன்னை மரியிடம் பெற்றுக்கொள்வோமாக. ஞானிகளின் பரந்த மனப்பான்மை நமக்கு கடவுளை அடையும் வழியை உணர்த்துவதாக! பிறக்கும் புத்தாண்டில் ஆக்கப்பூர்வமான நற்சிந்தனைகளை சிந்தித்து செயல்படுவோமாக!



ரோஸ் சேவியர்

# இம்மாதப் புனிதர்

## புனித வனத்து அந்தோனியார்



கி.பி. 251ஆம் ஆண்டு எகிப்தின் கோமா என்ற கிராமத்தில் ஒரு செல்வந்த கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தார். சிறுவயதிலிருந்தே இறைவன்மீது ஆழ்ந்த நம்பிக்கைக் கொண்டவராக இருந்தார். இளம் வயதில் தன் தந்தை - தாயை இழந்ததால், வாழ்க்கையின் நிலையற்ற தன்மையை ஆழமாக உணர்ந்தார்.

ஒருநாள் ஆலயத்தில் கேட்ட இறைவார்த்தை மத்தேயு 19:21 - "நிறைவுள்ளவராக இருக்க விரும்பினால், நீர் போய், உம் உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்பொழுது விண்ணுலகில் நீர் செல்வராய் இருப்பீர்." இந்த வார்த்தைகள் இவரின் உள்ளத்தைத் தொட்டது.

இந்த இறைவார்த்தை இறைவனின் அழைப்பு என்பதை உணர்ந்து தன் சொத்துகளை எல்லாம் ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டு, தன் சகோதரியை பாதுகாப்பான இடத்தில் ஒப்படைத்துவிட்டு, முழுமையாக இறைவனுக்காக வாழ தீர்மானித்த இவர், எகிப்தின் பாலைவனப் பகுதிகளுக்குச் சென்று, கடுமையான தவ வாழ்க்கையைத் தொடங்கினார்.

தனிமையான வாழ்வு, குறைந்த உணவு, நீண்ட நோன்பு, இடையறாத செபம் மற்றும் உடல் - மனக் கட்டுப்பாட்டுடன் வாழ்ந்தார். பாலைவனத்தின் கடின சூழ்நிலைகள், வெப்பம், பசி, தனிமை ஆகியவை அவரை சோதித்தபோதும், அவர் இறைவன்மீது கொண்ட உறுதியான நம்பிக்கையால் அவைகளை எதிர்கொண்டார்.

இவரின் புனித வாழ்க்கையும், துறவற ஒழுக்கமும் பலரைக் கவர்ந்தது. அவரைப் பின்பற்றி பல கலைஞர்கள் பாலைவனத்திற்கு வந்து தவ வாழ்க்கையைத் தொடங்கினர். புனிதரின் வாழ்க்கைமுறை மற்றும் ஆன்மீக வழிகாட்டுதல், கிறிஸ்தவ துறவறத்தின் அடித்தளமாக அமைந்தது.

தவ வாழ்க்கையில் இருந்தபோதிலும் மக்களிடமிருந்து முற்றிலும் விலகி வாழவில்லை. தன்னைத் தேடி வந்தவர்களை அன்புடன் வரவேற்று, துன்புறுவோர்க்கு ஆறுதல் கூறினார். நோயாளிகளின் நோய்களை குணமாக்கினார். இறைவனின் மேல் நம்பிக்கை இழந்தவர்களை இறைநம்பிக்கையில் வேரூன்றச் செய்தார்.

இவர் கி.பி. 356ஆம் ஆண்டு தனது 105வது வயதில் விண்ணகப் பிறப்படைந்தார். இறப்பதற்கு முன் தனது உடலை மறைவாகப் புதைக்க வேண்டும் என்றும், மனிதப் புகழை நாடாமல், இறைவனுக்கு மகிமை சேர்க்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இவரது திருநாள் ஜனவரி 17ஆம் நாள் உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.



**அருள்சகோ. மிக்கேல் அருள்ராஜ்**



# சிங்கை சீலா

புத்தாண்டு மறுநாள் மின் விளக்குகள் ஆங்காங்கே ஜொலித்துக் கொண்டிருந்தன.

பனிமயதாசன் இரவுப் பணியை முடித்துவிட்டு கடற்கரை சாலையில் வந்து கொண்டிருந்தவன், தற்செயலாக ரோட்டுக் கடையில் நண்பன் சீலன் உணவருந்திக் கொண்டிருந்ததை கவனித்தான். ஆச்சரியம் மிகுந்தவனாக அருகே சென்றான்.

“டேய் மக்கா, சிங்கப்பூர் சீலா நீயா? வீட்டில் ஏதாவது பிரச்சனையா?”

“அதெல்லாம் ஒன்னுமில்ல மக்கா, சும்மா ஒரு சேஞ்சுக்குத்தான்.”

சீலன் சிங்கப்பூரில் வேலை பார்க்கிறவன் புத்தாண்டு விடுமுறைக்கு சொந்த ஊருக்கு வந்துள்ளான். திருமணமாகி ஒரு பெண் குழந்தையும் இருக்கிறது. பனிமயதாசனிடம் தான் வைத்திருந்த சென்ட் பாட்டிலைக் கொடுத்தான். எதுக்கு மக்கா இதெல்லாம்?”

“சும்மாத்தான். வெளிநாட்டுப் பொருள் என்றால் ஒரு மோகம் இருக்கும் அல்லவா?”

“சரி. நான் கேட்ட கேள்விக்குப் பதில் இல்லையே?”

“என்ன கேள்வி?”

“அதான் இரண்டு ஆண்டுகளுக்குப் பின் வந்திருக்கிறாய். அதுவும் மனைவி கையால் சாப்பிடுவதை விட்டு கடை சாப்பாடு ஏன்?”

“நாளை மறுநாள் சிங்கப்பூர் செல்லவிருக்கிறேன்.”

“அடப்பாவி, வெளிநாட்டுக்குப் போனால் அப்புறம் இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகள் கழித்துத்தானே விடுமுறையில்



வருவாய். இங்கே இருக்கும்வரை வீட்டு சாப்பாடு சாப்பிட்டு நிம்மதியா இருக்கலாமே!”

“பத்துநாள்களும் மனைவி கையால் சமைத்த உணவைச் சாப்பிட்டுவிட்டு பதினோராவது நாளான நாளை மறுநாள் சிங்கப்பூரில் பத்துப்பேர்கள் தங்கும் அறையில் பிற மாநில ஊழியர்களோடு உப்புச் சப்பில்லா உணவைத் தானே சாப்பிட்டாகனும்? நாளைக்கு அந்த உணவின்மீது வெறுப்பு வராமல் இருக்கத்தான் இன்றே கடையில் உணவு சாப்பிடுகிறேன்.”

கிரேட் சீலா. உன்னுடைய சந்தோஷத்தை பொருள் கொடுத்து என்னோடு பகிர்ந்துகொள்கிறாய், ஆனால் என்னால் உனது துக்கத்தில் பங்குகொள்ள முடியவில்லை. வருகிறேன் மக்கா.”



ம. வெனான்சியஸ்



# விவிலியப் போட்டி 129

தயாரித்தவர் : **சகோ. பிரகாசி FBS**

**மத்தேயு நற்செய்தி அதிகாரம் 6 முதல் 10 வரை**

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

## பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | தட்டுங்கள் | - | வேலையாட்கள் குறைவு |
| 2. | சுங்கச் சாவடி | - | நூற்றுவர் தலைவர் |
| 3. | கண்தான் | - | கண்டடைவீர்கள் |
| 4. | கேளுங்கள் | - | நல்ல கனி கொடுக்கும் |
| 5. | அறுவடை மிகுதி | - | மறைநூல் அறிஞர் |
| 6. | நல்ல மரம் | - | உடலுக்கு விளக்கு |
| 7. | தேடுங்கள் | - | திறக்கப்படும் |
| 8. | ஒரு வார்த்தை | - | மத்தேயு |
| 9: | நானும் உம்மை பின்பற்றுவேன் | - | பேய் பிடித்த இருவர் |
| 10. | கதரேனர் | - | கொடுக்கப்படும் |

# விவிலியப் போட்டி 128

**டிசம்பர் 2025**

***விடைக்குறிப்புகள்***

**மத்தேயு நற்செய்தி அதிகாரம் 1 முதல் 5 வரை**

| | | |
|---|---|---|
| 1. | இறைவனிடம் | 5:44 |
| 2. | அறிவிலி யே | 5:22 |
| 3. | யோசேப்பு | 1:16 |
| 4. | தூய ஆவியால் | 1:18 |
| 5. | பணி செய் | 4:10 |
| 6. | ஏரோது அரசன் | 2:1 |
| 7. | வலைகளை | 4: 20 |
| 8. | மனிதர் | 5:16 |
| 9: | பூரிப்படைகிறேன் | 3:17 |
| 10. | கிறிஸ்து | 1:16 |

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.01.2026**

## உங்கள் கவனத்துக்கு

பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளைத் தாளில் எழுதி பங்கு அலுவலகத்துக்கு யார் மூலமாவது கொடுத்து விடுங்கள். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். மறவாமல் குடும்ப அட்டை எண்ணையும் எழுதுங்கள். வாட்ஸ் அப்பில் விடை அனுப்ப வேண்டாம். பெயர் எழுதப்படாத விடைத்தாள்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

**63831 98510** (வாட்ஸ் அப் மட்டும்) அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

**இந்த எண்ணுக்கு வரும் விடைகள் மட்டுமே எடுத்துக்கொள்ளப்படும். பழைய எண்ணுக்கு அனுப்பப்படும் விடைகள் நிராகரிக்கப்படும்.**

**வாட்ஸ் அப்பில் விடை எழுதும் சலுகை பிற பங்குகளைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே.**

*குறிப்பு : ஒரே கையெழுத்தில் இரண்டு மூன்று பதில் தாள்கள் அனுப்பி இருந்தால் வேறு வேறு பெயர்களில் இருந்தாலும் அவற்றில் ஒன்று மட்டுமே வெற்றி பெற்றதாக எடுத்துக் கொள்ளப்படும். இச்செயலைத் தவிர்க்கவும்*



**சரியான விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 216**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 127**

**விடை எழுதிய அன்பியங்கள் : 28**

**பரிசு பெறுபவர்கள் : 4**

| | |
|---|---|
| 1. இராயப்பர் அன்பியம் | போஸ்கோ ரெனோ |
| 2. சவேரியார் அன்பியம் | ஜான்சி ஜெயக்குமார் |
| 3. செபஸ்தியார் அன்பியம் | பிரவீனா |
| 4. சிந்தாயாத்திரை மாதா அன்பியம் | நேசம் |

## பாராட்டுக்குரியவர்கள் : 123

**அந்தோனியார் அன்பியம்**
5. சரோஜா
6. பிருந்தா
7. ரீனா மொறாயிஸ்
8. ஜெயா
9. லீனா கருணா

**அன்னை தெரசா**
10. ஜான்சி ராணி
11. ஜூலியட்ஸ் ரூபி

**அன்னை வேளாங்கன்னி**
12. டென்சி
13. கவாஷினி ஆல்வின்
14. மிஷல் மிரல்
15. ஜெரினா செல்வம்
16. லிசியா ஜெகதீஸ்

**கிறிஸ்தரசர்**
17. செலஸ்கி கிளமென்ட்
18. ரெக்ஸ் கிரீன்வெல்
19. ஜூலியட் சாவியோ
20. லூரட் வசந்த்
21. ஜாய் ரோச்

**தஸ்நேவிஸ் மாதா அன்பியம்**
22. சுரேஷ் பிரேமா
23. சுகன் மோனிஷா
24. அஸ்கேனியஸ் அந்தோணிசாமி
25. டாரல் தீத்தோணிஸ்
26. ராஜா ஐரின்

**திவ்ய பாலன் அன்பியம்**
27. சகாயராணி தனராஜ்
28. ஸ்டார்லக் ஏஞ்சலின்
29. சென்சிலா சகாயராஜ்
30. பிரின்சி

**பாத்திமா மாதா**
31. சுகந்தா ஸ்டெனி
32. பிச்சம்மாள்
33. அனு ஆல்வின்
34. ஸ்டெபி ரீகன்
35. ரீனா ராஜா
36. லிண்டா சீலன்
37. பிளேரின் ஜீவிதா

**இரக்கத்தின் மாதா**
38. இருதயம்மாள் கொன்சால்
39. சேவியர் அம்மாள் கோமஸ்
40. பிரைட்டன் ஜெரோபின்
41. சித்ரா மோத்தா
42. பாப்டிஸ்டா
43. செல்வி புரோ
44. சகாய ராணி

**ஜெபமாலை மாதா**
45. சகாயம்மாள் பெனடிக்ட்
46. கல்யாணி செல்வராஜ்

**ஜூடு அன்பியம்**
47. கிறிஸ்டோ ஜெபினா
48. டெரன்சியாஅரிஸ்டோ

**காவல் தூதர்**
49. ஜோ டிரினிஷா
50. ஜூலியஸ் தல்மேதா
51. அல்பின்
52. ரஸ்கின் வசந்தா
53. செல்வராணி
54. சார்லட் பிராங்
55. சாந்தி ஆல்ட்ரின்
56. எலிஜா இம்மானுவேல்
57. பிரிசில்லா

**குழந்தை தெரசா**
58. பெர்லிடென்சன்
59. கிறிஸ்டி லிஸ்டன்
60. பெனிமுறாய்ஸ்

**குழந்தை இயேசு**
61. மோனிகா செபஸ்டின்
62. எமல்டா
63. சுகிர்தா
64. பிரான்சிஸ் வாஸ்

**மணல் மாதா**
65. ரொசாரி கோமஸ்
66. வெர்ஜினியா
67. லீமாரோஸ் ஜாய்
68. ஜெயந்தி

**லூர்து மாதா**
69. ஆலிவர் வி. ராயர்
70. ஜெனே சேவியர்
71. ரோஸ்லின் தாமஸ்
72. பிலோ கோமஸ்
73. ரஜூலா ஜான்போஸ்கோ
74. சாண்டினா

**மிக்கேல் அதிதூதர்**
75. ஜோஸ்பின் பர்னாந்து
76. ஷீபா
77. ஸ்நோ ஆல்பிரிக்

**பனிமய அன்பியம்**
78. சுரேஷ் ஆனி
79. ஜாக்குலின் வினோதினி
80. ராணி
81. ஜூடிரதி
82. சகாயராஜா சகாயராணி
83. அந்தோணிசாமி
84. மெர்சி

**பவுலடியார்**
85. ஒபிலியாதாமஸ்
86. ராஜா ரோஸ்லின்

**பரிபூரண மாதா**
87. மெடோனோ
88. சப்னா கினிஸ்டன்

**பொம்பெய் மாதா**
89. இம்மாக்குலேட் சதீஷ்
90. லூடா கான்ஸ்டன்
91. அண்டோ எஃபினா
92. தெரசா பிரகாஷ்
93. பெலிக்ஸ் சோபியா
94. டிரைபேனா
95. மேத்யூ கர்டோசா
96. சித்ரா அலாய்
97. டிஃபானி அண்டோ

**இராயப்பர்**
98. டெய்ஸி
99. ரொமில்டா வெனான்சியுஸ்
100. நேவிஸ் அம்மாள்

**சவேரியார்**
101. டெலிலாஅமலன்
102. அனுஷியாபீட்டர்
103. வினிஸ்டா ஷெரின்
104. ஜாஸ்மிலின் ஆல்டோ
105. ஜோசப் வில்மா
106. ஜோர்னல் மெர்சி

**செபஸ்தியார்**
107. ஜெஸிலா சேவியர்
108. அந்தோனியம்மாள் டென்சிங்

**சிந்தாயாத்திரை மாதா**
109. ஜூடி ஆரோக்கியராஜ்
110. டோனஸ் ராயன்
111. லாசர் செல்வி

**சிறுமலர் அன்பியம்**
112. விஜி சகாயராஜ்
113. எல்சிட்டா ஆனந்தன்
114. விஜிலியா
115. தாயம்மாள்

**சூசையப்பர்**
116. கிறிஸ் ரீஜோ
117. ஹேமலதா
118. மென்சி
119. சவுமியா ஆல்டமென்
120. ஜாக்குலின் பர்னான்டோ
121. ஜெனிபர்னான்டோ

**திருச்சிலுவை**
122. ஜஸ்டின் ஸ்நோகுளோரி
123. ரமணி டிவோட்டா
124. ஆரோன் ஷாரோன்

**வியாகுல மாதா**
125. ஸ்பெயிலின் மதியா
126. லூர்து லினட்
127. ஜெரிஷா





## பிற பங்குகளிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 89

**பரிசு பெறுபவர்கள் : 4**

128. தருவைக்குளம் **லில்லி சோபியா**
129. பேட்டை **ஹெலனிட்டா**
130. திரேஸ்புரம் **அபின்சா**
131. திரு இருதயங்களின் பேராலயம் **கிரேட்டா ராஜா**

## பாராட்டுக்குரியவர்கள் : 85

**சென்னை**
132. ரெஜினா கிரகோரி
133. பிரேமா குணசீலன்
134. மேமா ஸ்டீபன்
135. கமலஜோதி ஜெயசீலன்
136. ஆண்டனிகா ஷெர்லி
137. ரெய்லி பர்னான்டோ
138. டெனிசா கிளாட்
139. கனிசியஸ் விஷால்

**கோயம்புத்தூர்**
140. ஆஷா தனசீலன்

**கொடைக்கானல்**
141. ஜெஸிந்தா மார்ட்டின்

**மதுரை**
142. சகோ. ஜான்சிமேரி
143. ஜெஸிந்தா மேரி

**திருச்சி**
144. ஜான்ஸி ராணி
145. மோனிட்டா கிறிஸ்டி
146. மேத்யூ விவேக்
147. ஜெக ரட்சகன்
148. டோனி

**ஆறுமுகநேரி**
149. ஜெயராணி

**ஆலந்தலை**
150. பொன்சேகா தங்கராஜ்
151. மரியம்மாள்
152. சகாயராணி

**தருவைக்குளம்**
153. மைக்கேல் ஸ்டிபானி

திருப்பூர்
154. ததேயூஸ் கரோலின்
155. பிரான்சிஸ் ஆர்லன்

**தேனி**
156. கரோலின் பிலவேந்திரன்
157. சூர்யா அன்பு
158. ரொசாரி மேரி ஈவ்லின்

**புதியம்புத்தூர்**
159. ஹெலன் அன்னமனி

**கயத்தார்**
160. அமல்ராஜ்

**திண்டுக்கல்**
161. ரோசாலி
162. ஜெர்மேன்

**கடலூர்**
163. ஹென்றிதாஸ்

**புன்னைக்காயல்**
164. ஜோஸ்னா

**வீரபாண்டியபட்டணம்**
165. ரேச்சல் சாந்தினி

**உவரி**
166. ஆர்லின் ஈவ்லின்

**உடன்குடி**
167. ஸ்நோவின்

**பரமக்குடி**
168. சைமன் சாந்தி

**சோமனூர்**
169. ராஜேந்திர அருள்

**சிவகாசி**
170. ஜெர்லின்

### தூத்துக்குடி நகர பங்குகள்

**திரு இதயங்களின் பேராலயம்**
171. ரமோலாகமிலஸ்
172. வெர்ஜினா ஜோஸ்பின் மேரி
173. டீனுராய் ஜேசுபாலு
174. ஸ்னோசன்

**குருஸ்புரம்**
175. ஜான்சி மென்டிஸ்
176. ஆசிர்வாதம்
177. மாசில்லா
178. பௌவுசி ஜோ மைக்கேல்

**லயன்ஸ் டவுன் சகாய மாதா**
179. சகாயம்
180. டோமினிக்
181. பேபின் ரால்ஃப்
182. டார்லிமா அமுதன்

**அன்னை வேளாங்கன்னி கோவில்**
183. சலைத் எலிசா

**யூதா ததேயு கோவில்**
184. ஆரோக்கிய சர்மிளா
185. ஜூடி ரீத்தம்மாள் மேரி
186. ரோஸ் சேவியர்
187. இம்மானுவேல் சேகர்
188. சகாயமேரி
189. சகாயராஜ் ரொட்ரிக்ஸ்

**அந்தோணியார் கோவில்**
190. டயானா வினோத்
191. இருதயம்மாள் கபிரியேல்
192. வயோலா ஜான்சன்
193. மென்சிலா லொயோலா
194. ரீடன்
195. மகேஷ் சுஜாதா

**காந்தி நகர்**
196. ரியா லினோ
197. கிளமென்சியா மேக்டன்
198. செலஸ்டின்
199. பிண்டன் சோபியா
200. சாந்தினி
201. பேபி வால்டர்

**அண்ணாநகர்**
202. வென்சிராணி

**சார்லஸ் கோவில்**
203. சகாயிட்டா மச்சாது
204. ரூபி ஏஞ்சல்
205. அல்போன்சா பர்னான்டோ

**புனித இஞ்ஞாசியார் கோவில்**
206. சகோ. லோராமேரி
207. பாத்திமா ஏஞ்சலின்
208. சூசைநெவின்
209. சகோ. மரிய சூசைரூபி

**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
210. வெர்ஜின்
211. தயாபரராணி

**திரேஸ்புரம்**
212. கோல்வின் ஜேசுராஜ்
213. ஸ்நோ வெண்பா
214. கிருபா

**பாத்திமா நகர்**
215. ஷர்மிளாரமேஷ்
216. மேரி ஹம்லின்

**கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 199**
**இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 216**

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 19)

## ஜனவரி - 2026

### திருவழிபாட்டு நேரங்கள்

| தினசரி திருப்பலிகள் | சனிக் கிழமைகளில் | ஞாயிற்றுக் கிழமைகளில் |
|---|---|---|
| காலை 5.30, 6.30<br>மாலை 5.30 | காலை 5.30, 6.30 திருப்பலி<br>காலை 11.00 செபமாலை, **நவநாள் திருப்பலி**<br>மாலை 5.30 திருப்பலி<br>மாலை 6.30 செபமாலை நவநாள், நற்கருணை ஆசீர் | காலை **5.00, 6.30, 8.00** திருப்பலி<br>காலை **9.30** ஆங்கிலத் திருப்பலி<br>மாலை **5.30** திருப்பலி<br>மாலை **6.30** செபமாலை, நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** *சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00*

*மற்ற நாள்களில் எந்நேரமும் பங்குத்தந்தையரை அணுகலாம்.*

- ✓ *திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (திருவருகைக் காலம், தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)*
- ✓ *புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (திருவருகைக் காலம், தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).*
- ✓ *புதுநன்மை அருள்சாதனம் பெற விரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.*
- ✓ *திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00 மணிக்கு அனுமதி உண்டு. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.*
- ✓ *ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30*
- ✓ *அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்*

✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம் :** *காலை 10.00 மணி - 01.00 மணி*
*மாலை 04.00 மணி - 05.30 மணி*

✓ *இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.*

✓ *நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்.*





# பனிமயச் சுவடுகள்

*(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)*

- ★ **30.11.2025 ஞாயிறு** காலை 8.00 மணித் திருப்பலியில் அடைக்கலாபுரம் புனித சூசை அறநிலையத்தின் இயக்குநர் அருள்பணி. புரொமில்டன் அவர்களிடம் அறநிலையத்திற்கு உணவு கொடுக்க 75 நபர்களால் தரப்பட்ட தொகை ரூ.1,67,300/- ஒப்படைக்கப்பட்டது..
- ★ **08.12.2025 திங்கள்** அமலஉற்பவ அன்னையின் பெருவிழாவை முன்னிட்டு நண்பகல் 12.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணி வரை வரப்பிரசாத திருமணி ஆராதனை நடைபெற்றது.
- ★ **08.12.2025 திங்கள்** நமது பங்கின் அமலவை அருள்சகோதரிகள் தங்கள் சபைத் திருவிழாவைக் கொண்டாடினர்.
- ★ **11.12.2025 வியாழன்** பங்கு மேய்ப்புப் பணிப் பேரவையின் நிதிக்குழு, செயற்குழுக் கூட்டங்கள் நடைபெற்றன.
- ★ **12.12.2025 வெள்ளி** பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது.
- ★ **14.12.2025 ஞாயிறு** லூர்து மாதா இளம்பெண்கள் சபையின் 6ஆம் ஆண்டு விழா காலை 06.30 மணி திருப்பலியில் கொண்டாடப்பட்டது. இறையடியார்கள் அந்தோணி சூசைநாதர், அகஸ்டின் பெரைரா இருவரையும் நினைவு கூரும் சிறப்புத் திருப்பலியாகவும் அது அமைந்தது.
- ★ **15.12.2025 திங்கள்** பாலன் பிறப்புக்கான கொடியேற்றம் இரண்டாம் திருப்பலி முடிந்ததும் நடைபெற்றது.
- ★ **18.12.2025 வியாழன்** இறையடியார் அந்தோனி சூசைநாதரின் 143ஆவது பிறந்தநாள்; பரிசுத்த அமலோற்பவ மாதா வாலிபர் சபையினரால் கொண்டாடப்பட்டது.
- ★ **19.12.2025 வெள்ளி** பங்கிலுள்ள எளியோருக்கு கிறிஸ்துமஸ் பரிசாக 5 கிலோ அரிசி, 500 ரூபாய் மதிப்புள்ள டோக்கன் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.
- ★ **25.12.2025 வியாழன்** "பனிமய இளையோர்" முன்னெடுப்பில் கிறிஸ்துமஸ் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன.
- ★ **29.12.2025 திங்கள்** பங்கின் வெள்ளி விழா, பொன் விழாத் தம்பதியருக்கான ஆசீர்வாத நன்றித் திருப்பலி மாலை 05.30 மணிக்கு நடைபெற்றது.
- ★ **31.12.2025 புதன்** ஆண்டின் இறுதி நாள் நன்றி வழிபாடு நடைபெற்றது.



# பங்கில் நிகழ்ந்தவை



## வரவேற்கிறோம்

### 1. திருமுழுக்குப் பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 43. | இம்மானுவேல் | கெவின் - ஸ்டேனிட்டா | 28.12.2025 | அன்னை தெரசா |
| 44. | கிறிஸ்டோஃப் கொரைரா | பிரியந்த் கொரைரா - விவேதா | 28.12.2025 | சூசையப்பர் |
| 45. | சாஷா கேட்லின் மிஷல் | ஷிரோன் - அட்ரீனா | 28.12.2025 | திருச்சிலுவை |



## வாழ்த்துகின்றோம்

### 2. புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 41. | அபிகேல் | ராஜூவ் - அனிஸ்டா | 27.12.2025 | அன்னை தெரசா |
| 42. | ஓமாரியோ மிக்கேல் பர்னான்டோ | வில்மோட் -கிரேஸி | 27.12.2025 | சவேரியார் |
| 43. | லூர்டஸ் டான்யா | பிரபுராஜ் - சுசி | 27.12.2025 | குழந்தை இயேசு |
| 44. | மரிய ரொயானா | மொறால் - ஆனி | 28.12.2025 | லூர்து மாதா |



## செபிக்கின்றோம்

### 3. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் பெயர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 57 | மேரி பர்னாந்து | சேசையா பர்னாந்து | 05.12.2025 | லூர்து மாதா |
| 58. | மெர்சி பர்னாந்து | எப்போமி பர்னாந்து | 06.12.2025 | அன்னை தெரசா |
| 59. | மரிய ஜெரிஷ் | சிங்கராயன் பர்னான்டோ | 19.12.2025 | அன்னை தெரசா |
| 60. | அல்போன்ஸ் மோத்தா | சுகந்தி மோத்தா | 24.12.2025 | அந்தோனியார் |

## நடைபெறவிருப்பவை

- ★ **03.01.2026 மாதத்தின் முதல் சனி** மாலையில் சப்பரப் பவனியும், நவநாள் வழிபாடும் நடைபெறும்.
- ★ **09.01.2026 வெள்ளி** நோயாளர்கள், முதியோருக்கு இல்லங்களில் நற்கருணை வழங்கப்படும்.

## திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

- ❖ ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும் வழங்கப்படுகின்றது. வரும் நாள்களில் **அன்பு உணவு** வழங்க விரும்புவோர் பங்கு அலுவலகத்தில் முன்பதிவு செய்யவும்.
- ❖ ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசீர், திருப்பலி நடைபெறும்.



# பனிமய சாட்சியம்

**133**

### எடிசன் ராணி, தூத்துக்குடி

எனது மகள் ஜோ ட்ரினிஷா M.B.A. படிப்பிற்காக TANCET தேர்வு எழுதி அரசுக் கல்லூரியில் இடம் கிடைக்க பனிமயத் தாயிடம் வேண்டியிருந்தோம். இப்போது மாதாவின் கருணையாலும், பரிந்துரையாலும் மகளுக்கு கோயம்புத்தூர் அரசுக் கல்லூரியில் இடம் கிடைத்துள்ளது. இந்த சாட்சியின் வழியாக இயேசு கிறிஸ்துவுக்கும், பனிமயத் தாய்க்கும் நன்றி கூறுகிறோம். மரியே வாழ்க.

**134**

### செல்வநாதன், அரக்கோணம்

எனக்கு கடந்த இரண்டு மாதமாக வயிற்றில் வலி வந்துகொண்டே இருந்தது. மருத்துவரிடம் சென்று பரிசோதித்தபோது அவர் X-ray, Scan என்று எல்லாம் எடுக்கச் சொன்னார். அறுவை சிகிச்சை செய்ய நேரிடும் என்றும் கூறினார். என்ன செய்வது என்று தெரியாமல் பனிமய மாதாவிடம் வேண்டிக் கொண்டேன். மருத்துவரிடம் மீண்டும் பரிசோதனைக்கு சென்றபோது மாத்திரையிலேயே சரிசெய்துவிடலாம் என்று சொன்னார்கள். அதன்படியே வலியிலிருந்து சுகம் கிடைத்தது. பனிமயத் தாய்க்கு நன்றியும், சாட்சியமாக இதனைத் தெரிவிக்கின்றேன். இயேசுவுக்கே நன்றி... இயேசுவுக்கே புகழ்... பனிமயத் தாயே வாழ்க...

## விண்ணக வாழ்வின்

# இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாகத் திகழ்வாய்.
உன் கடவுளின் கரத்தில் அரச மகுடமாய் விளங்குவாய்
(எசாயா 62:3)



தோற்றம்
08.05.1955

மறைவு
26.01.2024

# N. அந்தோனியப்பா பர்னாந்து

வயது : 68

நினைவுத் திருப்பலி

**26.01.2026**
**மாலை 5.30 மணி**

பிரிவால் துயருறும்

மனைவி : **A. பிச்சம்மாள்**
**மகள்கள், மகன்**
**மருமக்கள், பேரன்கள், பேத்திகள்**

## விண்ணக வாழ்வின்
## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

"நல்ல போராட்டத்தை போராடினேன்.
ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்"
(2திமொ 4:7)



# T. பயஸ் பீரிஸ்

பிறப்பு 07.06.1954

இறப்பு 22.01.2025

உங்கள் நினைவுடன்

P. பெல்சி
மகள்கள், மருமகன்கள்
பேரன், பேத்தி

---

## விண்ணக வாழ்வின்
## நான்காம் ஆண்டு நினைவு அஞ்சலி

"ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாய்த் திகழ்வாய்.
உன் கடவுளின் கரத்தில் அரச மகுடமாகவும் இருப்பாய்"
(எசா 52:3)



# P. பெனிட்டா மச்சாது

பிறப்பு 21.11.1944

இறப்பு 14.10.2021

உங்கள் நினைவுடன்

T. பசலி பீரிஸ்
மகன், மருமகள்,
மகள்கள், மருமகன்கள்
பேரன், பேத்தி

## Second Year Remembrance



# J. KENILTTAN MANGALARAJ

**27.06.1968 - 22.01.2024**

*Your presence we miss,*
*Your memories we treasure,*
*We walk on the trail;*
*You left behind;*
*Loving you always;*
*Forgetting you never.*

Deeply remembered by

*Wife* : **SHAKILA MANGALARAJ**
*Sons* : **K. MACHIO, K. JOEL**
*and*
**Family Members**

76B, South Emperor Street, Tuticorin - 1.

# மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி

உன் உள்ளமும் உடலும் எங்கள் பாதுகாப்பில் நிலைத்திருக்கும்
(திபா 16:9)



மண்ணில்
05.08.1937

விண்ணில்
16.01.2023

# S. அலங்காரம் பர்னாந்து

அப்பா, இந்த நாளில், நீங்கள் இல்லாத வெற்றிடத்தை உணர்கிறோம்
நீங்கள் எப்போதும் எங்கள் எண்ணங்களில் இருக்கிறீர்கள்,
மறக்க முடியாத, உங்கள் நினைவுகளே எங்கள் பலம்,
உங்கள் அன்பு என்றும் வழிகாட்டும்,
உங்கள் நினைவுடன் என்றும் எங்கள் அன்பில்...

பிரிவால் துயருறும்

மனைவி : **ராஜேஸ்வரி**
மற்றும்
**குடும்பத்தினர், பேரன், பேத்திகள்,**
**பூட்டன் பூட்டிகள்**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்.
என்னை விசுவசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்."

(யோவான் 11:25)



**மண்ணில்**
**19.03.1996**

**விண்ணில்**
**20.01.2025**

# J. ஷைனி

**வயது : 29**

நினையாத வேளையில் இறைவன் உம்மை அழைத்துக் கொண்டார்
இத்துயரிலிருந்து மீளாமல் தினமும் தவிக்கிறோம்
இறைவனோடு இருக்கிறாய் என்பது மட்டுமே எமது ஆறுதல்
இருப்பினும் உன் இழப்பு எமக்கு பேரிழப்பே...

என்றும் உன் நினைவுகளுடன்

**குடும்பத்தினர்**

# விண்ணக வாழ்வின்
# 21ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

**11.01.2026**



பிறப்பு
15.10.1940

இறப்பு
11.01.2005

# J. அந்தோணிசாமி பர்னாந்து

வயது : 65

என்மேல் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்.

*என்றும் உங்கள் நினைவில் வாழும்*

மகன்
**A. சேசையா பர்னாந்து**

மருமகள்
**J. ஜெயஸ்ரீ பர்னாந்து**

மகன்
**A. ஜாய்சன்**

மருமகள்
**J. பமிலா**

பேத்தி
**J. ரேச்சல்**

பேரன்கள்
**J. ஜெசாந் பர்னாந்து**
**J. ஜெர்விந் பர்னாந்து**

*மற்றும் குடும்பத்தினர்*

SHINY Ph : 98421 31493